[1986 மே 8

மேல்நிலைப் பள்ளிகளில் புவியமைப்பியல்.

708—(*வினா எண். 5057) திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகளில் புவியமைப் பியல் (ஜியாலஜி) பாட திட்டத்தை கொண்டுவரும் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டின் வரலாறு.

709—(*வினா எண். 6267) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்க காலத்திற்கு முதற்கொண்டு இன்று வரையிலான தமிழ்நாட்டின் வரலாற்றை தொகுக்க ஏதேனும் முயற்சி மேற் கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டின் வரலாற்றை ஆறு தொகுதிகளாக வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் முதல் இரண்டு தொகுதிகள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. அவை :

(1) தொல்பழங்காலம்.

(2) சங்க காலம் வாழ்வியல் மற்றும் அரசியல்.

எஞ்சிய தொகுதிகளை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றை ஆராய்ந்த நேரத்தில் தமிழ் உணர்வு குறைவாக இருந்த காரணத்தினால், தமிழக வரலாற்றை மறைக்க வேண்டுமென்று ஒரு சில கூட்டங்கள் முயற்சி செய்த நேரத்தில், சில ஆதாரங்கள் மறைக்கப்பட்டதாக சில வல்லுநர்